இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 14-08-2024

# தேசியப் பேரிடராக அறிவியுங்கள்!

வரலாற்றில் மாபெரும் சோகமாக பதிவாகி இருக்கிறது வயநாடு பேரழிவு!

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானவர் எண்ணிக்கை 430 ஆகிவிட்டது. காணாமல் போன 120 பேரைத் தேடும் பணி 14 ஆவது நாளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனை உடல்களை, உயிரற்றவைகளாக எடுக்கப் போகிறார்களோ?

இந்த நிலச்சரிவில் சூரல்மலை, முண்டக்கை, பூஞ்சிரித்தோடு, அட்டமலை ஆகிய இடங்களில் உள்ள வீடுகள், அடித்து செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகள் உடைமைகளை இழந்தனர். மண்ணோடு மண்ணாக புதைந்து போன வீடுகள் அதிகம். நிலங்களுக்குள் வாழ்ந்த இடங்கள் போய்விட்டன.

**பத்து நாட்கள் கழித்து சாவகாசமாக பார்வையிட வந்தார் பிரதமர் மோடி. வெறும் கையோடு வந்தவர், வெறுங்கையோடு திரும்பிச் சென்று விட்டார். ‘வயநாட்டில் ஏற்பட்டது தேசியப் பேரிடர்’ என்று அறிவிக்கக் கூட அவருக்கு மனமில்லை. குஜராத்தில் நடந்திருந்தால் அன்று மாலையே தேசியப் பேரிடராக அறிவிக்கப்பட்டிருக்கும். அவர்களது தேசியம் என்பது ‘இந்திய தேசியம்’ அல்ல. குஜராத் தேசியம்தான்.**

ஜுலை மாதம் 30 ஆம் நாள் வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டது. ஆகஸ்ட் 10 ஆம் நாள்தான் பிரதமர் வந்து பார்வையிட்டார். அவரது சிந்தனையில் கேரளா இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்த்தால் அது நம் தவறே தவிர, அவரது தவறல்ல.

பேரிடரின் அளவை பிரதமர் மோடியிடம் விளக்கினார் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன். முண்டக்கை நிலச்சரிவு பேரிடரின் அளவு மற்றும் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு அதிதீவிர பாதிப்பாகவும், தேசியப் பேரிடராகவும் அறிவிக்குமாறு கோரிக்கை வைத்தார் கேரள முதலமைச்சர். நிலச்சரிவின் தாக்கம் மற்றும் அளவை மனதில் கொண்டு தேசியப் பேரிடராக அறிவிக்குமாறு எழுத்து மூலமான கோரிக்கையையும் அவர் வழங்கினார்.

**இப்பகுதியில் நிலச்சரிவு ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் கால நிலை மாற்றம்தான் என்கிறார் ‘ஹியூம் சென்டர் ஃபார் ஈக்காலஜி’யின் இயக்குநரான சி.கே. விஷ்ணுதாஸ் . “இப்படி நிலச்சரிவுகள் நடப்பதற்கு முக்கியமான காரணம், காலநிலை மாற்றம்தான். கடந்த பத்து ஆண்டுகளில் காலநிலை மாற்றத்தால் மழை பெய்யும் விதமே முற்றிலுமாக மாறியிருக்கிறது. எங்கள் சென்டர் மூலம் 200 இடங்களில் மழைமானிகளைப் பொருத்தியிருக்கிறோம். அதை வைத்து இதனைத் தெளிவாகச் சொல்ல முடியும். கால நிலை மாற்றத்தின் காரணமாகத் தென்கிழக்கு ஆசியப் பகுதிகள் முழுவதுமே அதிக மழையை எதிர்கொள்கின்றன. குறிப்பாக அரபிக் கடல் பகுதி அதிக வெப்பமடைகிறது. இதனால் மிகப்பெரிய செங்குத்தான மேகங்கள் உருவாகின்றன. 2 கி.மீ. உயர மேகங்கள் உருவாகி, மேகவெடிப்பும் அடிக்கடி நிகழ்கிறது. அந்தப் பகுதியில் நிலச்சரிவு ஏற்பட இதுவொரு முக்கியக் காரணம்,” என்கிறார் சி.கே. விஷ்ணுதாஸ்.**

**இதையெல்லாம் கவனத்தில் கொள்கிறதா ஒன்றிய அரசு? இது கேரளாவுக்கான பிரச்சினை மட்டுமல்ல, இந்தியாவே கவனிக்க வேண்டிய தேசியப் பிரச்சினை அல்லவா?**

வெறும் நிலச்சரிவால் மட்டுமே இந்த பாதிப்பு ஏற்படவில்லை. புவி வெப்பமடைதல், கால நிலை மாற்றம் ஆகிய காரணங்களும் இதற்கு அடிப்படையாகும். கடந்த கோடை காலத்தில் முதன்முதலாக வெப்ப அலை பரவி இருக்கிறது. பருவ நிலை மாற்றமும் அதிகமான மழைக்கு காரணமாக இருந்துள்ளது. இவை அனைத்தும் சேர்ந்துதான் நிலச்சரிவாக வெளிப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் ஆதாரப்பூர்வமாக கொடுத்த பிறகும் சம்பிரதாயமான வார்த்தைகள்தான் பிரதமரிடம் இருந்து வந்தன. பேரிடரால் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நாடே உள்ளது, கேரளாவுக்கான அனைத்து உதவிகளையும் செய்வோம், உங்கள் தேவைகளை எங்களுக்கு எழுதுங்கள், குட் பை... என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார் பிரதமர். அதே தமிழ்நாட்டுக்கு காட்டிய பெப்பேதான், கேரளாவுக்கும்!

**தேசியப் பேரிடராக அறிவித்தால், ஒன்றிய அரசில் இருந்து உடனடியாக பணம் தந்தாக வேண்டும். அதனால்தான், ‘தேசியப் பேரிடர்’ என்ற வார்த்தை வெளியில் வராமல் தொண்டை அடைக்கிறது. தேசிய பேரிடராக ஒரு பேரழிவு அறிவிக்கப்பட்டுவிட்டால், அதனை ஈடுசெய்யத் தேவைப்படும் முழு நிதியையும் தேசிய பேரிடர் மேலாண்மை வாரிய நிதியில் இருந்து ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும். இதன் தலைவராக இருப்பவர் பிரதமர்தான். அவர் நினைத்தால் பேரிடராக அறிவிக்கலாம். நிதியையும் வாரி வழங்கலாம். அப்படி எல்லாம் நடந்து விடக் கூடாது என்பதால்தான் பிரதமர் மவுனம் சாதித்து விட்டுச் சென்றுள்ளார்.**

பெருமழை பெய்ததால் மலைப்பகுதியில் வெள்ளம் சூழ்ந்தது. வெள்ளம் சூழ்ந்ததால் மலைகள், இடம் பெயர்கின்றன. இடம்பெயர்ந்த மலைகள், குடியிருப்புகளை புதைக்கின்றன. வீடுகள் மண்ணோடு மண்ணாகப் போகின்றன. உள்ளே இருந்தவர் அனைவரும் மண்ணுக்குள் புதைகிறார்கள். இதைவிட பேரழிவு என்ன இருக்க முடியும்?

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்பு பணிகளுக்காக ரூ.2 ஆயிரம் கோடி நிதி உதவி வேண்டும் என கேரள அரசு கோரிக்கை வைத்தது. அதற்கும் பிரதமரிடம் இருந்து பதில் இல்லை. ‘விளக்கமாக கடிதம் எழுதுங்கள்’ என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

**கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு என்பார்கள்? பேரழிவுதான் கண்ணுக்கு முன்னால் நடந்துள்ளது, அதன் தடயங்கள் கண்ணுக்கு முன்னால் கிடக்கிறது. 430 உடல்களை விட வேறு ஆதாரங்கள் ஏதும் தேவையா? உண்மையாகவே இவர்கள் மரணம் அடைந்து விட்டார்கள் என்பதற்கான ‘டெத் சர்டிபிகேட்’ எதிர்பார்க்கிறார்களா?**



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி சென்னை ராயப்பேட்டையில் நேற்று முன்தினம் (12.08.2024) நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் 3 பள்ளிகளில் VIRTUSAA நிறுவனத்தின் சமூகபங்களிப்பு நிதி ரூபாய் 1.70 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 5 கணினி ஆய்வகங்களை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு மாதிரிப்பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா.சுதன், (ப.நி), பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், VIRTUSAA நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ராம்மீனாட்சி சுந்தரம், தொழில்நுட்ப சேவை வரியின் தலைவர் வெங்கடேசன் விஜயராகவன், நிர்வாகத் துணைத் தலைவர் என்.எம். வைத்யநாதன், சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் சா.மார்ஸ், மாவட்டக் கல்விஅலுவலர் திருமதி இரா.சி.சரஸ்வதி, ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சென்னை கலைவாணர் அரங்கில் 18ஆம் தேதி அன்று விழா!


## நூற்றாண்டு விழாவை முன்னிட்டு – தமிழினத் தலைவர்

# ‘டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி’ நினைவு 100 ரூபாய் நாணயம்!

## ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, ஆக. 14 –

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ‘டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி’ ரூ.100 நினைவு நாணயம் வெளியீட்டு விழா முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகிற 18ஆம் தேதி அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.




இவ்விழாவில் ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலைஞர் நூற்றாண்டு நினைவு ரூ.100 நாணயத்தை வெளியிட, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

இது பற்றிய விவரம் வருமாறு:–

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாணயத்திற்கு ஒன்றிய நிதியமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

இதைத்தொடர்ந்து, ஆக. 18ம் தேதி சென்னையில் நடைபெறும் விழாவில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 5 முறை முதல்வராகவும், 13 முறை சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகவும் இருந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கடந்த 2023ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி முதல் ஓர் ஆண்டுக்கு கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

இதை முன்னிட்டு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ‘நினைவு நாணயம்’ வெளியிட ஒன்றிய அரசுக்கு கடந்தாண்டு ஜூலை 23ம் தேதி கடிதம் எழுதினார். இந்த நாணயத்தை, கடந்த ஜூன் 3ம் தேதி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளில் வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் இந்த நாணயம் குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமல் இருந்தது. நாணயத்திற்கான நடைமுறை பணிகள் முடிவடையாததே இதற்கு காரணம் என்று கூறப்பட்டது.

தற்போது இவை அனைத்தும் முடிந்து கடந்த மாதம் நாணயம் வெளியிடுவதற்கான அனுமதி கடிதத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கையெழுத்திட்டுள்ளார்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் ரூ.100 நினைவு நாணயம், அதன் அமைப்பு, உள்ளடக்கம் விலை ஆகியவை முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்த நாணயத்தை அச்சிடுவதற்கு கடந்த ஜூலை 12-ம் தேதி மத்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து கலைஞரின் நினைவு நாணயத்திற்கான மாதிரி வரைபடம் தமிழக அரசிடம் இருந்து பெறப்பட்டது. இதை வடிவமைக்கும் பணியை ஒன்றிய நிதியமைச்சகம் செய்து வந்தது. நாணயத்தை, ஒன்றிய நிதி அமைச்சகத்தின் உத்தரவின்படி இந்திய ரிசர்வ் வங்கி அச்சடித்து வெளியிடுகிறது.

இந்தி மற்றும் ஆங்கிலத்தில் ‘டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி’ என்ற பெயருடன், ‘தமிழ் வெல்லும்’ என்ற தமிழ் வாசகம் அவரது நினைவு நாணயத்தில் இடம்பெற உள்ளது. தற்போது தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நாணயம் வெளியிடுவதற்கான நிகழ்ச்சியை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஏற்பாட்டின் பேரில் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி ஆக. 17 அல்லது 18ம் தேதி சென்னை, கலைவாணர் அரங்கில் விழா நடைபெறுகிறது. ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கலைஞரின் 100 ரூபாய் நாணயத்தை வெளியிட உள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கலைஞரின் நாணயத்தை பெற்றுக் கொள்கிறார்.

விழாவில், அமைச்சர்கள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

## தமிழகத்தில் இன்று கனமழை!

சென்னை, ஆக. 14 –

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: –

தமிழகத்தில் இன்று ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, தென்காசி, தேனி, திண்டுக்கல், திருப்பூர், நீலகிரி, ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மாவட்டங்கள், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழகத்தில் நாளை மறுநாள் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 107 (அ) வட்டம் ரயில்வே காலனி, முதலாண்டி காலனியில் 8 வருட நீண்டநாள் கோரிக்கையான விருகம்பாக்கம் கால்வாய் நடைப்பாலம் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டி நிகழ்வை துவக்கி வைத்ததை தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் அப்பகுதி மக்களுடன் பாலம் கட்டுமானப் பணிக்காக அடிக்கல் நாட்டினார். உடன், அண்ணாநகர் தெற்கு பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி. கிரண் சர்மிலி, வட்டச் செயலாளர் சிவக்குமார் மற்றும் ஊர் பொதுமக்கள் உள்ளனர்.